# கௌரவ Peter Dutton எம்.பி
# குடிவரவு மற்றும் எல்லைப்பாதுகாப்பு அமைச்சர்

## ஊடக வெளியீடு

23 ஏப்ரல் 2017

### உறுதியான மற்றும் பாதுகாப்பான எல்லைப்பாதுகாப்பின் 1000 நாட்கள்

ஆட்கடத்தும் படகு கடைசியாக அவுஸ்திரேலியாவை வந்து சேர்ந்து இப்போது 1000 நாட்களாவதுடன், ஆட்கடத்துவோரின் கையில் கடலில் உயிர்துறந்ததாகக் கேள்வியுற்று மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகிறது.

இந்த நிலைமை தொடர்ந்திருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாக குடிவரவு, எல்லைப்பாதுகாப்பு அமைச்சர் Peter Dutton கூறினார்.

"இந்தக் கூட்டு நடவடிக்கையினது கடுமையான எல்லைப்பாதுகாப்புக் கொள்கைகள் நன்கு செயற்பட்டு வந்துள்ளன என்பதுடன் இப்போதும் செயற்பட்டுவருவதைச் சந்தேகத்திற்கிடமின்றி அடைந்த வெற்றிகள் வெளிப்படுத்துகின்றன" திரு. Dutton கூறினார்.

"எல்லைப்பாதுகாப்பு நடவடிக்கைக்கு முன்னர், 800 க்கும் அதிகமான ஆட்கடத்தும் படகுகளில் 50,000 க்கும் மேற்பட்ட கடல்மார்க்க சட்டவிரோத வருகையாளர்களையும், 8000 க்கும் மேற்பட்ட சிறுவர்களைத் தடுப்பு நிலையத்திலும் அத்துடன் கடலில் 1200 க்கும் மேற்பட்ட பரிதாப இறப்புக்களையும் அவுஸ்திரேலியா கண்டுள்ளது.

"கடல்வழியான ஆட்கடத்தலை எல்லைபாதுகாப்பு நடவடிக்கை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துள்ளதுடன், எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றியுமுள்ளது. தடுப்புநிலையங்களிலிருந்து எல்லாச் சிறுவர்களையும் அகற்றவும், 17 தடுப்பு நிலையங்களை மூடுவதற்கும் இந்த வெற்றிகள் அரசாங்கத்திற்கு துணைபுரிந்துள்ளன".

"நாம் வெற்றியடைந்தாலும், ஆட்கள் கடத்தப்படக்கூடிய அச்சம் இன்னமும் உண்டு" என்றார் திரு. Dutton.

“கடந்த 1000 நாட்களில், 30 ஆட்கடத்தும் படகுகள் மற்றும் அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக வர எத்தனித்த 765 க்கும் மேற்பட்டோர் எல்லைப்பாதுகாப்பு நடவடிக்கையால் வழிமறிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

“எமது இத்துணை பாதுகாப்பிற்கும் ஊடாக ஒரு வழியைக்காண்பதற்கு ஆட்கடத்துவோர் எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டனர், ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை நிறுத்துவதில் எமது எல்லைப் பாதுகாப்பு தரப்பினரின் வல்லமை வெற்றிகண்டுள்ளது.

“ஆட்கடத்துவோரின் படகுகளை கண்டுபிடிப்பதிலும், தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்புவதிலும், அவுஸ்திரேலியாவின் திறமை முன்னர் எப்பொழுதையும்விட இப்போது பலமாக உள்ளது.

“எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைக்கு பங்களிக்கும் 16 அவுஸ்திரேலிய முகவர்களுக்கும், அவுஸ்திரேலியாவின் எல்லைகளைக் காப்பாற்ற அர்ப்பணிப்புடன் நாள்தோறும் உழைக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இந்த மைல் கல் ஒரு நன்மதிப்பாகும்.

“குற்றமுறையான ஆட்கடத்தும் வலையமைப்பைக் குழப்பவும், உருக்குலைக்கவுமென எமது சர்வதேச பங்காளிகள் புரிந்த பங்களிப்புகளையும் நான் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

“பிராந்தியத்தினூடான ஆட்கடத்தலை முறியடிப்பதற்கான எமது முயற்சியில் அவுஸ்திரேலியாவும், எமது பிராந்திய பங்காளிகளும் தொடர்ந்தும் உறுதியுடன் இருக்கிறோம்.

“இனிமேலும் பாதுகாப்பற்ற படகுகளில் மக்களை ஏமாற்றி அவர்களின் உயிர்களைப் பணயம் வைக்கவும் ஆட்கடத்துவோரின் மோசடியால் அவர்களின் குடும்பங்களின் எதிர்கால நிதியை அழிக்கவும் இடமளிப்பதில்லை என்பதனை நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

“படகுமூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குப் பயணிக்க எத்தனிக்கும் எந்தவொரு நபரும் அவுஸ்திரேலியாவில் குடியேறுவது ஒருபோதும் அவரின் விருப்பத்தேர்வாகாது. விதிவிலக்குகள் கிடையாது.”

**மேலும் தகவல்: அமைச்சர் Dutton உடைய காரியாலயம் - 02 6277 7860**